செ.வெ.எண் :21/செப்டம்பர்　　　　　　　　　　　　　　　　　　　நாள்: 12.09.2019

# இராமநாதபுரம் மாவட்டம்

## தனிநபர், விற்பனை கூடங்கள் மற்றும் வணிக நிறுவனங்கள் சீட்டு/கூப்பன், குலுக்கல் பரிசு திட்டம் போன்ற திட்டங்களை செயல்படுத்தக் கூடாது

## மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் பல்வேறு வணிக நிறுவனங்கள் தங்களுடைய வணிகத்தை பெருக்கி கொள்ளும் நோக்கத்தோடு கவர்ச்சிகரமான பரிசு குலுக்கல் திட்டங்களை நடத்துகிறார்கள். இத்தகைய பரிசுத் திட்டங்களின் கீழ் பொருட்களை அதிக விலைக்கு விற்பனை செய்தல், தரமற்ற பொருட்களை விற்பனை செய்தல், கலப்பட பொருட்கள் மற்றும் பழைய பொருட்களை விற்பனை செய்தல் போன்ற செயல்களால் நுகர்வோர் பாதிக்கப்படுகின்றனர்.

எனவே, இராமநாதபுரம் மாவட்ட நுகர்வோரின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு இனிவரும் நாட்களில் தனிநபர், விற்பனை கூடங்கள் மற்றும் வணிக நிறுவனங்கள் தங்கள் வியாபாரத்தில் சீட்டு/கூப்பன் திட்டங்கள், குலுக்கல் திட்டங்கள், பரிசு திட்டங்கள், சலுகை திட்டங்கள் போன்ற திட்டங்களை செயல்படுத்தக் கூடாது. மீறினால் தமிழ்நாடு பரிசு திட்டங்கள் (தடுப்பு) சட்டம் 1979-ன்படி குற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**